factum

CFLI/FCIL
Canada Fund for Local Initiatives
Fonds canadien d'initiatives locales

MITIGATING ADVERSE IMPACTS CAUSED BY LAWS AFFECTING ONLINE/DIGITAL PUBLICATIONS/ ONLINE CONTENT

මාර්ගගත ප්‍රකාශන කෙරෙහි බලපාන නීති මගින් සිදුවන අහිතකර බලපෑම අවම කිරීම සඳහා

இணைய வெளியீடுகளுக்கு பாதகம் விளைவிக்கும் சட்டங்களால் ஏற்படும் தீங்கான தாக்கங்களை குறைப்பதற்கான

# Policy Report Recommendations

# ප්‍රතිපත්ති නිර්දේශ වාර්තාව

# கொள்கை பரிந்துரைகள் அறிக்கை

**26th February 2026**
Colombo, Sri Lanka

factum CFLI/FCIL

factum

CFLI/FCIL
Canada Fund for Local Initiatives
Fonds canadien d'initiatives locales

**பரிந்துரைகள்**

இணைய வெளியீடுகளுக்கு பாதகம் விளைவிக்கும் சட்டங்களால் ஏற்படும் தீங்கான தாக்கங்களை குறைப்பதற்கான

# கொள்கை பரிந்துரைகள் அறிக்கை

# இணைய வெளியீடுகளுக்கு பாதகம் விளைவிக்கும் சட்டங்களால் ஏற்படும் தீங்கான தாக்கங்ளை குறைப்பதற்கான கொள்கை பரிந்துரைகள் அறிக்கை

## 1. நிறைவேற்றுச் சுருக்கம்

சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் உள்ளிட்ட இணைய ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் வெளியீடுகள் சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இதன் காரணமாக, இணைய ஊடக வெளியீடுகள் தொடர்பில் இன்று பெருமளவிலான பொது மற்றும் சமூகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சில சட்ட ஏற்பாடுகளில் காணப்படும் தெளிவற்ற தன்மைகள், மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரத் தரப்பினரின் பக்கச்சார்பு அல்லது கவனக்குறைவு காரணமாக, சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் மற்றும் இணையத்தள ஆசிரியர்கள் பல்வேறு சட்ட ரீதியான சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ள பல சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. அதேவேளை, சமூக ஊடகங்களில் பகிரப்படும் கவனக்குறைவான, பொறுப்பற்ற மற்றும் போலியான உள்ளடக்கங்கள் அல்லது பதிவுகள் பெருமளவிலான மக்களுக்குப் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் பெண்கள், சிறுவர்கள், மத மற்றும் இனச் சிறுபான்மையினர் மற்றும் LGBTIQ+ சமூகத்தினர் எதிர்நோக்கும் பாதிப்புகள் மிகவும் பாரதூரமானவையாகக் காணப்படுகின்றன. எனவே, இணைய வெளியீடுகளை மேற்கொள்ளும் தரப்பினர் எதிர்நோக்கும் சட்டத் தடைகளை நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கும், இணைய வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்கள் மூலம் தனிநபர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதற்கும் தற்போதைய சட்ட ஏற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

கனடிய உயர்ஸ்தானிகராலயத்தின் நிதிப் பங்களிப்புடன், CFLI திட்டத்தின் கீழ் Factum நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட இச்செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக சமூக ஊடக செயற்பாட்டாளர்கள், இணையத்தள நிர்வாகிகள், உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் ஆதிவாசி சமூகப் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இக்கலந்துரையாடல்களின் போது இவ்விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. அங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் இலங்கையின் தற்போதைய சட்டக் கட்டமைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், இணைய வெளியீடு மற்றும் உள்ளடக்கங்களுடன் தொடர்புடைய தரப்பினரின் கவனத்திற்காக Factum நிறுவனம் இந்தக் கொள்கைப் பரிந்துரை அறிக்கையைத் (Policy Recommendation Report) தயாரித்துள்ளது.

இக்கொள்கைப் பரிந்துரை அறிக்கையானது, இலங்கையில் இணைய வெளியீடுகள் தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், இணைய வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் சட்ட ஏற்பாடுகள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது இணையத்தில் வெளியிடும் தரப்பினர் எதிர்கொள்ளும் எதிர்மறையான விளைவுகள் மற்றும் இணைய கருத்து வெளிப்பாடுகளால் தனிநபர்கள், குழுக்கள் அல்லது சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்துக் கவனம் செலுத்துகிறது. அதன் அடிப்படையில், இரு தரப்பினருக்கும் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட

*பங்குதாரர்கள் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

## 2. இலங்கையில் நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்களுக்குப் பொருந்தும் சட்டங்கள்

*இணையத்தளங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் பிற நிகழ்நிலை ஊடகங்கள் தொடர்பில் பல்வேறு சட்டங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.*

*அனைத்து சட்டங்களையும் பின்வரும் துறைகளாக வகைப்படுத்தலாம்:*

- *அடிப்படை உரிமைகள் சட்டங்கள் (Fundamental Rights Laws)*
- *ஒழுங்குமுறைச் சட்டங்கள் (Regulatory Laws)*
- *குற்றவியல் சட்டங்கள் (Criminal Laws)*
- *அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள் (Intellectual Property Laws)*
- *தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் (National Security Laws)*
- *தேர்தல் சட்டங்கள் (Election Laws)*

### 2.1. அடிப்படை உரிமைகள் சட்டங்கள் (Fundamental Rights Laws)

*இலங்கை அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் (Chapter III) குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அடிப்படை உரிமைகள் நிகழ்நிலை வெளியீடு மற்றும் உள்ளடக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவை:*

1. *உறுப்புரை **14(1)(a)** இன் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள "பேச்சு மற்றும் வெளியீட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம்".*
2. *உறுப்புரை **14(1)(g)** இன் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள "சட்டபூர்வமான எந்தவொரு தொழில், நியமனம், வர்த்தகம், வியாபாரம் அல்லது முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்".*
3. *உறுப்புரை **14A** இன் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள "தகவலறியும் உரிமை".*

*நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில், இந்த அடிப்படை உரிமைகள் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்க உருவாக்குநர்களையும் பாதுகாப்பதோடு, அவர்களின் பணிகளை முன்னெடுக்க வழிவகுக்கின்றன. இனிவரும் பகுதிகளில் கலந்துரையாடப்படவுள்ள நிகழ்நிலை வெளியீடுகள் தொடர்பான சட்ட ரீதியான விடயங்களில், ஒரு நபர் நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையினால் (Executive or Administrative Action) அநீதிக்கு இழைக்கப்பட்டால், அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்வதன் மூலமோ அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதன் மூலமோ பரிகாரம் தேடிக்கொள்ள முடியும்.*

## 2.2. ஒழுங்குமுறைச் சட்டங்கள் (Regulatory Laws)

*நிகழ்நிலை வெளியீடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக தற்போது நடைமுறையிலுள்ள பிரதான சட்டவாக்கம் **2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டம் (Online Safety Act, No. 9 of 2024)** ஆகும்.*

*இச்சட்டமூலம் அதன் வரைவு நிலையிலிருந்தே (Draft stage) கடுமையான எதிர்ப்புகளைச் சந்தித்தது. இச்சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் முன்னணி சட்டத்தரணிகளின் கூட்டமைப்பான 'சட்டத்தரணிகள் ஒன்றிணைவு' (Lawyers Collective), 2023 செப்டம்பர் 22 அன்று விடுத்த ஊடக அறிக்கையில் இச்சட்டமூலத்தை வன்மையாகக் கண்டித்திருந்தது. அதேபோன்று, சிவில் அமைப்புகள், ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய 'அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான ஊடக மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டுச் சம்மேளனம்', இச்சட்டமூலத்திற்குத் தமது பலத்த எதிர்ப்பை வெளியிட்டன. அனைத்து ஊடக அமைப்புகளும் இச்சட்டமூலத்தை அரசாங்கம் முன்நகர்த்தக் கூடாது எனத் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தன. இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமும் (Bar Association of Sri Lanka), 2023 செப்டம்பர் 23 அன்று நடைபெற்ற அதன் செயற்குழுக் கூட்டத்தில், இச்சட்டமூலத்தை மீளப்பெறுமாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணையை ஒருமனதாக நிறைவேற்றியது.*[1]

*இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின் கீழ் அதன் அரசியலமைப்பு ரீதியான செல்லுபடித்தன்மையை (Constitutionality) சவாலுக்கு உட்படுத்தி தனிநபர்கள் மற்றும் அமைப்புகளினால் உச்ச நீதிமன்றத்தில் 47 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதற்கமைய, இச்சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் திருத்தப்பட்ட போதிலும், தொடர்ச்சியான எதிர்ப்புகள் காரணமாக, இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனேயே மேலதிக திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும் என விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.*

*நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான அனைத்து ஒழுங்குமுறை நடவடிக்கைகளும் இச்சட்டத்தின் கீழேயே முன்னெடுக்கப்படுகின்றன. டிஜிட்டல் ஊடக வெளியீடுகளில் இச்சட்டம் ஏற்படுத்தும் பிரதான தாக்கம் யாதெனில், நிகழ்நிலையில் தடைசெய்யப்பட்ட வெளியீடுகளை மேற்கொள்வது தொடர்பான குற்றங்களை அறிமுகப்படுத்தியமையாகும். இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவு முதல் 22 ஆம் பிரிவு வரை குறிப்பிடப்பட்டுள்ள தடைசெய்யப்பட்ட வெளியீடுகளை நிகழ்நிலை வழிகளினூடாக மேற்கொள்வதை இச்சட்டம் தடை செய்கிறது. இத்தகைய வெளியீடுகளினால் பாதிப்புக்குள்ளாகும் ஒரு நபர் பெற்றுக்கொள்ளக்கூடிய மூன்று வகையான நிவாரணங்கள் குறித்தும் இச்சட்டம் விளக்குகின்றது. அவையாவன:*

- *தடைசெய்யப்பட்ட வெளியீடுகளினால் (பிரிவு 12 முதல் பிரிவு 22 வரை) ஒரு நபர் பாதிப்புக்குள்ளாகும் பட்சத்தில், அவர் **நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவிடம்** முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்க முடியும்; ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணையைத் தொடர்ந்து, குறித்த வெளியீட்டை அகற்றுவதற்கான கட்டளையைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

- ***நீதவான் நீதிமன்றத்தில்** வழக்கைத் தாக்கல் செய்து, குறித்த வெளியீட்டை அகற்றுவதற்கான நிபந்தனையுடனான கட்டளையைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

- *சம்பந்தப்பட்ட வெளியீட்டிற்கு எதிராக சிவில் நடவடிக்கை எடுப்பதற்காக, அவ்வெளியீட்டை மேற்கொண்ட நபரைச் சரியாக அடையாளம் காண முடியாத சந்தர்ப்பங்களில், **மாவட்ட நீதிமன்றத்தில்** சேவை வழங்குநரைப் (Service Provider)*

பொறுப்பாக்கி வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம், குறித்த நபரின் அடையாளத்தை வெளிப்படுத்துமாறு சேவை வழங்குநருக்குக் கட்டளை பிறப்பிக்கும் உத்தரவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்படாத போதிலும், தடைசெய்யப்பட்ட வெளியீடுகள் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைகளை முன்னெடுத்து அபராதம் விதிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க தாக்கம் யாதெனில், நிகழ்நிலைத் தளங்களைப் (Online Platforms) பதிவு செய்வதற்கு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும். மேலும், தடைசெய்யப்பட்ட வெளியீடுகளைக் கொண்டுள்ள நிகழ்நிலைத் தளங்களை அவ்வாறு அடையாளப்படுத்தும் (Designate) அதிகாரமும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய தளங்களுக்கு அனுசரணை வழங்குவது அல்லது அவற்றிலிருந்து அனுசரணை பெறுவது குற்றமாகக் கருதப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிகமாக, நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்களுக்கான ஒழுக்கநெறிக்கோவையை (Code of Ethics) உருவாக்கும் அதிகாரமும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது, இச்சட்டம் பகுதியளவிலேயே நடைமுறையில் உள்ளது. இச்சட்டத்தின் கீழ் இதுவரை விதிகளோ அல்லது ஒழுங்கு விதிகளோ உருவாக்கப்படவில்லை என்பதுடன், ஆணைக்குழுவும் இன்னும் நியமிக்கப்படவில்லை. மேலும், இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சு பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது.

இணைய ஊடகங்களுடன் தொடர்புடைய மற்றுமொரு ஒழுங்குமுறைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட **1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டமாகும்**. நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான இணைய சேவை வழங்கலுக்கான அலைவரிசை ஒதுக்கீடு மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் இச்சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக இச்சட்டத்தின் மூலம் தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு (Telecommunications Regulatory Commission) நிறுவப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த ஆணைக்குழு நிகழ்நிலை வெளியீடுகளின் உள்ளடக்கங்களை (Content) ஒழுங்குபடுத்துவதில்லை.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் (Personal Data Protection Act) நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், ஊடகப் பயன்பாட்டைப் பாதிக்கும் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குவிதிகள் இன்னும் வெளியிடப்படாததால், தற்போதைய நிலையில் இது செல்வாக்குச் செலுத்தவில்லை.

### 2.3. நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்களுக்குப் பொருந்தும் குற்றவியல் சட்டங்கள்

இலங்கையில் நடைமுறையிலுள்ள பல குற்றவியல் சட்டங்களின் ஏற்பாடுகள் இணையவழி வெளியீடுகளுக்கும் பொருந்தும். அவையாவன:

**2.3.1.** தண்டனைச் சட்டக்கோவை (Penal Code): தண்டனைச் சட்டக்கோவையின் 120, 286, 286(A), 291(A), 291(B), 345, 365(C), 402, 403 மற்றும் 486 ஆகிய பிரிவுகள் நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவை.

**2.3.2.** ஆபாசப் பிரசுரங்கள் சட்டம் (Obscene Publications Act): இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், ஆபாசமான வெளியீடுகளை விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

**2.3.3.** சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (தீங்கு விளைவிக்கும் பிரசுரங்கள்) சட்டம் (Child and Young Persons (Harmful Publications) Act)x: ஒரு சிறுவன் அல்லது இளம் ஆளின் கைக்குக் கிடைக்கும்

பட்சத்தில், அவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கக்கூடிய எதனையும் பரப்புவது இச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது.

**2.3.4. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைச் சட்டம் (ICCPR Act):** இச்சட்டத்தின் 3(1) பிரிவின் கீழ், போர் அல்லது மத மற்றும் இன வெறுப்பைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**2.3.5. கணினிச் சட்டவிரோதச் செயல்கள் சட்டம் (Computer Crimes Act):** தேசிய பாதுகாப்பு அல்லது பொருளாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் எதனையும் பரப்புவதை இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு தடை செய்கிறது.

**2.3.6. குடும்ப வன்முறைத் தடுத்தல் சட்டம் (Prevention of Domestic Violence Act):** இச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள தரப்பினரின் அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையிலான ஊடக அறிக்கைகளை வெளியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**2.3.7. பணம் தூய்த்தாக்கல் தடுத்தல் சட்டம் (Prevention of Money Laundering Act):** பணச் சலவை தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் போது, சந்தேக நபர்களின் அடையாளங்களை ஊடகங்கள் வாயிலாகப் பகிரங்கப்படுத்துவதை இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு தடை செய்கிறது.

## 2.4. நிகழ்நிலை வெளியீடுகள் / உள்ளடக்கங்களைப் பாதிக்கும் தேசிய பாதுகாப்புச் சட்டங்கள்

இலங்கையில் நடைமுறையிலுள்ள பல தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் நிகழ்நிலை வெளியீடுகள்/உள்ளடக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவையாவன:

**2.4.1. பொதுப் பாதுகாப்புத் கட்டளைச் சட்டம் (Public Security Ordinance):** பொதுப் பாதுகாப்புத் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமை *(State of Emergency)* பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், அந்தந்த நேரத்தில் அமலிலுள்ள அவசரகால ஒழுங்குவிதிகளின் *(Emergency Regulations)* மூலம் வெகுஜன ஊடகங்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவே நிகழ்நிலை ஊடக வெளியீடுகளும் அமைய வேண்டும்.

**2.4.2. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் (Prevention of Terrorism (Temporary Provisions) Act):** பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் குற்றமாகக் கருதப்படும் ஒரு வெளியீட்டை அல்லது இச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட ஒரு கட்டளையை மீறும் வகையிலான எந்தவொரு விடயத்தையும் நிகழ்நிலைத் தளமொன்றில் வெளியிடுவது ஒரு குற்றமாகும்.

**2.4.3. உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டம் (Official Secrets Act):** உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட வலயங்களாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட இடங்களின் புகைப்படங்களை வெளியிடுவது அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான இரகசியத் தகவல்களைப் பிரசுரிப்பது தண்டனைக்குரிய குற்றமென இச்சட்டம் குறிப்பிடுகின்றது.

## 2.5. நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்களைப் பாதிக்கும் அறிவுசார் சொத்துரிமைச் சட்டம்

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க அறிவுசார் சொத்துரிமைச் சட்டம் (Intellectual Property Act, No. 36 of 2003):

இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்படி, இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு படைப்பாகக் கருதப்படும் ஒன்றின் முழுப்பகுதியையோ அல்லது அதன் கணிசமான ஒரு பகுதியையோ, அதன் ஆசிரியர் அல்லது உருவாக்குநரின் உரிய அனுமதியின்றி மீள் உருவாக்கம் செய்வது, வெளியீட்டு உரிமையை (Right of Publication) மீறும் செயலாகக் கருதப்படும்.

## 2.6. நிகழ்நிலை வெளியீடுகள் / உள்ளடக்கங்களைப் பாதிக்கும் அவதூறுச் சட்டங்கள் (Defamation Laws)

அவதூறுச் சட்டத்தின் கீழ், பின்வரும் மூன்று பிரதான வகைப்பாடுகள் குறித்து அவதானமாக இருத்தல் வேண்டும்:

**2.6.1. நீதிமன்ற அவமதிப்பு (Contempt of Court):** நிகழ்நிலை தொடர்பாடலில் ஈடுபடுவோர், அரசியலமைப்பின் திருத்தப்பட்ட 105 ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது நிறுவனம் ஒன்றினை அவமதித்தல் சட்டம் (Contempt of a Court, Tribunal or Institution Act, No. 8 of 2024) ஆகியவற்றில் உள்ள ஏற்பாடுகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படல் வேண்டும்.

**2.6.2. நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள் (Parliamentary Privileges):** 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க நாடாளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் வரப்பிரசாதங்கள்) சட்டத்தின் கீழ், நாடாளுமன்றத்தையோ அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையோ அவமதிக்கும் வகையிலான வெளியீடுகளை மேற்கொள்வது ஒரு குற்றவியல் குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**2.6.3. சிவில் அவதூறு அல்லது தனிநபர் அவதூறு (Civil Defamation)**: ஒரு குறிப்பிட்ட கூற்றின் மூலம் ஒரு நபரின் கௌரவத்திற்கு அல்லது நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அக்கூற்றை வெளியிட்டுப் பிரசுரித்த நபரிடமிருந்து நட்டஈடு கோரி சிவில் வழக்குத் தாக்கல் செய்ய பாதிக்கப்பட்ட நபருக்கு உரிமையுண்டு. எனவே, ஒரு விடயத்தைக் குறிப்பிடும் போது அதன் உண்மைத்தன்மை குறித்து அதீத கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 2.7. நிகழ்நிலை வெளியீடுகள் / உள்ளடக்கங்களைப் பாதிக்கும் தேர்தல் சட்டங்கள்

**2.7.1. அரசியலமைப்பு**: அரசியலமைப்பின் 104(B)(5) ஆம் உறுப்புரையின் கீழ், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடத்துவதை உறுதிப்படுத்தும் நோக்கில், இலங்கை தேர்தல் ஆணைக்குழுவானது தான் அவசியமெனக் கருதும் ஊடக வழிகாட்டல்களை (Media Guidelines) எந்தவொரு வானொலி அல்லது தொலைக்காட்சி சேவை நடத்துனருக்கும் அல்லது எந்தவொரு பத்திரிகை உரிமையாளருக்கும் அல்லது வெளியீட்டாளருக்கும் முன்கூட்டியே வழங்குவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அதற்கமைய, தேர்தல் காலப்பகுதியொன்றின் போது, தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டு வர்த்தமானியில்

பிரசுரிக்கப்படும் ஊடக வழிகாட்டல்களை அறிந்திருப்பதும் அதற்கேற்பச் செயற்படுவதும் அவசியமாகும்.

**2.7.2. தேர்தல் சட்டங்கள்**: தேர்தல் சட்டங்கள்: நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றில் உள்ள பொதுவான ஏற்பாடுகள், ஒரு வேட்பாளருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான போலி அறிக்கைகளைப் பிரசுரிப்பதையும், முறையற்ற செல்வாக்கை (Undue Influence) செலுத்தும் வகையிலான விடயங்களை வெளியிடுவதையும் தேர்தல் குற்றங்களாக (Election Offences) அங்கீகரித்துள்ளன.

எனவே, வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நேரத்திலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இத்தகைய வெளியீடுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

## 3. நிகழ்நிலை வெளியீட்டாளர்கள், தளங்கள், பயனர்கள் மற்றும் உள்ளடக்க உருவாக்குநர்கள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் சட்ட ஏற்பாடுகள்

### 3.1. நிகழ்நிலை காப்புச் சட்டம் (Online Safety Act)

இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடைகள் தெளிவற்றவை மற்றும் துல்லியமற்றவை *(Vague and Imprecise)*. இவை மிகவும் விரிவாக வியாக்கியானப்படுத்தப்படக் கூடியவை என்பதால், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. "தடைசெய்யப்பட்ட கூற்று" *(Prohibited Statement)* எனும் குற்றம் மிகவும் பரந்த அளவில் விளக்கம் பெறக்கூடிய ஒன்றாக இருப்பதால், ஆக்கபூர்வமான நிகழ்நிலைத் தொடர்பாடல்களில் ஈடுபடும் உள்ளடக்க உருவாக்குநர்களின் வெளியீடுகளுக்கு எதிராக ஆணைக்குழு கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம் அதிகமாக உள்ளது. குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட கூற்று பொய்யானதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதிலுள்ள சிக்கல் தன்மை காரணமாக, நல்நோக்குடன் *(Good faith)* மேற்கொள்ளப்படும் வெளியீடுகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது பேச்சுச் சுதந்திரத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துவதாக அமையும்.

அதேபோல், இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் சுயாதீனமற்ற ஆணைக்குழுவிற்கு *(Non-independent Commission)*, தடைசெய்யப்பட்ட வெளியீடுகள் குறித்துத் தீர்மானிப்பதற்கும் அத்தகைய வெளியீடுகளை நிறுத்துமாறு வெளியீட்டாளர்களுக்கு அறிவிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையானது, "குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதி" *(Presumption of innocence)* எனும் சட்டக் கோட்பாட்டைச் சவாலுக்கு உட்படுத்துகிறது. மேலும், இத்தகையதொரு சுயாதீனமற்ற ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்படும் கட்டளைகள் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை முடக்கும் *(Chilling effect)* ஒரு கருவியாக அமையக்கூடும். இவ்வாணைக்குழுவின் முடிவுகள் அரசியல் ரீதியானதாக அமைய வாய்ப்புள்ளதால், இது பிரஜைகளின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்குப் பெரும் தடையாக அமைகின்றது.

அவ்வாறே, இச்சட்டம் இணைய சேவை வழங்குநர்கள் *(ISPs)* மற்றும் சமூக ஊடகத் தளங்கள் மீது குற்றவியல் பொறுப்பைச் *(Criminal Liability)* சுமத்துவதால், அத்தகைய நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறும் அபாயம் காணப்படுகின்றது. இது சமூக ஊடகங்கள் ஊடாகக் கருத்து வெளிப்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு வழிவகுக்கும். இணைய சேவை வழங்குநர்கள் இலங்கையிலிருந்து வெளியேறும் பட்சத்தில், நிகழ்நிலை விளம்பரங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாகப் பொருட்களை விற்பனை செய்வோர் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்க நேரிடும்.

இருப்பினும், இச்சட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டிய திருத்தங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட வேண்டிய விதிகள் அல்லது கட்டளைகள் பிரகடனப்படுத்தப்படவில்லை. அத்துடன் இதற்கான ஆணைக்குழுவும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

அதற்கமைய, தற்போதைய நிலையில் இச்சட்டத்தின் கீழ் (24(2) ஆம் பிரிவின் கீழ்), நிகழ்நிலை ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் வெளியீடுகளை அகற்றுவதற்காக நீதவான் நீதிமன்றங்களில் தனிநபர் வழக்குகள் (Private Actions) தாக்கல் செய்யும் அதிகாரம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இவ்வழக்குகளின் ஊடாக, முறைப்பாட்டாளர்களுக்கு தமக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நிகழ்நிலை வெளியீடுகளை - குறிப்பாக சமூக ஊடகப் பதிவுகளை - விரைவாக அகற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பொதுநலன் சார்ந்த மற்றும் நியாயமான சில பதிவுகளும் அகற்றப்படுவதாகவும், அத்தகைய செயற்பாடுகள் ஊக்கமளிக்கப்படாமல் முடக்கப்படுவதாகவும் சில சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் கருதுகின்றனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 2026 பெப்ரவரி 03 (2026-02-03) அன்று விடுத்த ஊடக அறிக்கையில், "நீதி அமைச்சு நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்குப் பதிலாக பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுடன் கூடிய புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தும் வரை, இச்சட்டத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்த வேண்டும்" எனத் தெரிவித்தது.[2]

### 3.2. (சர்வதேச) சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கைச் சட்டம் (ICCPR Act)

2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவானது, "எந்தவொரு நபரும் போரைப் பரப்புதல் அல்லது பாகுபாடு, பகைமை அல்லது வன்முறைக்குத் தூண்டுதலாக அமையும் தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுதல் ஆகாது" எனக் குறிப்பிடுகின்றது. இந்த ஏற்பாட்டின் கீழ் கடந்த சில வருடங்களில் பல சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கைதுகளிலிருந்து எழும் அடிப்படை உரிமை வழக்குகள் மற்றும் பிணை விண்ணப்பங்களின் போது, சில கைதுகள் தன்னிச்சையான முறையில் (Arbitrarily) மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றங்கள் அவதானித்துள்ளன. பொலிஸார் இப்பிரிவின் கீழ் தன்னிச்சையான கைதுகளை முன்னெடுப்பதன் காரணமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டில் பொலிஸாருக்கான வழிகாட்டல்களை வெளியிட்டிருந்தது.[3]

### 3.3. கணினிக் குற்றங்கள் சட்டம் (Computer Crimes Act)

2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ், கணினியைப் பயன்படுத்தி தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் அல்லது பொதுப் பாதுகாப்புக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயலையும் செய்வது குற்றமாகும். இக்குற்றச்சாட்டின் கீழ் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இணையச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ஏற்பாட்டின் கீழ் ஒரு நபர் காவலில் எடுக்கப்படும் போது, அவர் பயன்படுத்திய கணினிகள் மற்றும் நகர்பேசி/திறன்பேசிகள் (Smartphones) கைப்பற்றப்பட்டு வழக்கில் சான்றுப் பொருட்களாக வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக, அக்குறிப்பிட்ட நபர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், அந்தச்

சாதனங்கள் மற்றும் அவற்றில் சேமிக்கப்பட்டுள்ள தரவுகள் பறிமுதல் செய்யப்படுவதால் அவர்கள் தமது தொழிலைத் தொடர்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தச் சூழ்நிலையைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவானது, "தகவல் தொழில்நுட்பத் துறையில் போதுமான அறிவையும் திறமையையும் கொண்டிருப்பதாக பொலிஸ் அதிபரினால் (IGP) எழுத்துப்பூர்வமாகச் சான்றளிக்கப்பட்ட ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தவிர்ந்த, வேறு எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் இச்சட்டத்தின் கீழான விசாரணை நோக்கங்களுக்காக எந்தவொரு கணினியையும் அணுகுதல் ஆகாது" எனக் குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், கணினிகள் மற்றும் நகர்பேசிகளைப் பரிசோதிக்கும் போது பொலிஸார் இவ்வேற்பாடு குறித்து எவ்வித கவனமும் செலுத்துவதாகத் தெரியவில்லை.

### 3.4. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

1978 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவானது மிகவும் பரந்த அளவில் வியாக்கியானம் செய்யப்படக்கூடிய ஒரு ஏற்பாடாகும். இப்பிரிவின் கீழும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் கீழ் ஒரு நபர் காவலில் எடுக்கப்படும் போது, அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமலேயே பாதுகாப்பு அமைச்சரினால் வழங்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவின் (Detention Order) அடிப்படையில் ஒரு வருடம் வரை தடுத்து வைக்க முடியும். எனவே, 2 ஆம் பிரிவின் செயற்பாடானது டிஜிட்டல் ஊடகச் செயற்பாட்டாளர்களுக்குப் பாரிய பாதகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

### 3.5. தண்டனைச் சட்டக்கோவை

*தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவின் கீழும் இணையத்தள உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்பைத் தூண்டுவது குற்றமென 120 ஆம் பிரிவு குறிப்பிடுகின்ற போதிலும், நீதியை நிலைநாட்டும் நோக்கத்திற்காக அல்லது தவறுகள் மற்றும் பிழைகளைத் திருத்தும் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்படும் தூண்டுதல்கள் இப்பிரிவின் கீழ் குற்றமாகாது என அதன் விளக்கக் குறிப்புகள் (Explanatory notes) குறிப்பிடுகின்றன.*

### 3.6. பொதுப் பாதுகாப்புத் கட்டளைச் சட்டம்

*பொதுப் பாதுகாப்புத் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போது, ஜனாதிபதி அவசரகால ஒழுங்குவாதிகளைப் பிறப்பிக்க முடியும். அரசியலமைப்பின் 15(7) ஆம் உறுப்புரைக்கு இணங்க, அரசியலமைப்பின் 14(1)(a) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள பேச்சு மற்றும் வெளியீட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட கருத்துத் தெரிவிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் வகையில் இத்தகைய அவசரகால ஒழுங்குவிதிகள் அமையலாம். தற்போதைய காலப்பகுதியிலும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், 2025 நவம்பர் 28 ஆம் திகதியிட்ட 2464/30 ஆம் இலக்க மற்றும் 2464/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் நடைமுறைக்கு வந்துள்ள '2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (பல்வகை ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்குவிதிகள்' அமலில் உள்ளன.*

*இதன் 18 மற்றும் 20 ஆம் கட்டளைகள், ஒரு வகையில் நிகழ்நிலை கருத்து வெளிப்பாடுகளுக்குத் தடையாக அமைந்தபோதிலும், இப்பிரிவுகளின் கீழ் எந்தவொரு நிகழ்நிலை கருத்துரையாளரும்*

*(உள்ளடக்க வெளியீட்டாளர்/உருவாக்குநர்) இதுவரை காவலில் எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை.*

### 3.7. *தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்*

2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமானது, 'தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குதல்' (Personal data processing) என்பதன் வரைவிலக்கணத்திற்குள் இணையத்தின் ஊடாக தனிப்பட்ட தகவல்களைப் பரப்புவதையும் உள்ளடக்கியுள்ளது. இதனால், இணையத்தில் உள்ளடக்கங்களைப் பகிரும் போது, சம்பந்தப்பட்ட தரவு உரிமையாளரின் (Data subject) ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன.

எவ்வாறாயினும், இச்சட்டம் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததாலும், இதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இன்னும் வெளியிடப்படாததாலும், நிகழ்நிலை வெளியீடுகள் அல்லது உள்ளடக்கங்கள் மீது இதன் தாக்கம் தற்போதைய நிலையில் காணப்படவில்லை.

## 4. *சட்டம் அல்லது சட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள்*

### 4.1. *சட்டவிரோதமான கைதுகள்*

*சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தின் (ICCPR Act) 3(1) ஆம் பிரிவை மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் காவலில் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன. இவர்களில் பலர், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படமாட்டாது என சட்டமா அதிபரினால் கௌரவ நீதவான் நீதிமன்றங்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சட்டவிரோதக் கைதுகளுக்கு எதிராகச் சில தனிநபர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.*

### 4.2. *விசாரணை செய்தல் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைப்பாணை விடுத்தல்*

*சில பதிவுகள் தொடர்பாக வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, பொலிஸார் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களையும் இணைய எழுத்தாளர்களையும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கின்றமையை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு அழைக்கும் போது, அதற்கான சரியான காரணங்களை அல்லது அடிப்படை ஆதாரங்களை பொலிஸார் தெளிவுபடுத்துவதில்லை. இது தொடர்பாக, பொலிஸ் அதிபரினால் 2025 ஜூலை 02 (2025-07-02) திகதியிடப்பட்ட RTM-101, CRTM-01 இலக்க சுற்றுநிருபம் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும், அச்சுற்றுநிருபத்திற்கு முரணான செயற்பாடுகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன.*

### 4.3. *குற்றவியல் அவதூறு தொடர்பான குற்றச்சாட்டுகள்*

அரசியல்வாதிகள் மற்றும் பொது நபர்கள் தமக்குச் சமூக ஊடகப் பதிவுகள் அல்லது செய்தி இணையத்தள வெளியீடுகள் மூலம் அவதூறு ஏற்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (CID) மற்றும் பிற பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளும் முறைப்பாடுகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நபர்களைப் பொலிஸார் விசாரணைக்கு அழைக்கின்றனர். 2002 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் 'குற்றவியல் அவதூறு' (Criminal Defamation) எனும் குற்றம் தண்டனைச் சட்டக்கோவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும், தற்போது அவதூறு என்பது ஒரு சிவில் வழக்கிற்கான அடிப்படையே தவிர குற்றவியல் குற்றமல்ல என்ற உண்மையை மீறி, பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கைகள் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களையும் இணையத்தள ஆசிரியர்களையும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றன. பொலிஸாரின் இத்தகைய நடத்தையினால் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இணையத்தள ஆசிரியர்கள்/எழுத்தாளர்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருமாறு கோரி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2026 பெப்ரவரி 03 ஆம் திகதி விடுத்த ஊடக அறிக்கையின் மூலம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

### 4.4. போலியான வழக்குகள்

கணினிக் குற்றங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பரந்த வீச்செல்லையைப் பயன்படுத்தி, பொது முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை வெளிப்படுத்தும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இணைய எழுத்தாளர்களுக்கு எதிராக நிபந்தனையுடனான நீதிமன்றக் கட்டளைகளும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையானது மக்கள் தமது கருத்துக்களை நிகழ்நிலையில் வெளிப்படுத்துவதை ஊக்கமிழக்கச் செய்யும் ஒரு காரணியாக மாறியுள்ளது.

### 4.5. கணினிகளைக் கைப்பற்றும் போது நிகழும் முறைகேடுகள்

கணினிக் குற்றங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இச்சட்டத்தின் கீழான குற்றமொன்றை விசாரணை செய்யும் அதிகாரம் உரிய பயிற்சி பெற்றிருப்பதாகப் பொலிஸ் அதிபரினால் சான்றளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தருக்கே உண்டு. எனினும், நடைமுறைச் சாத்தியமான நிலைமை இதற்கு மாறுபட்டதாகவே உள்ளது. அதேபோல், இச்சட்டத்தின் கீழ் கணினிகள் அல்லது நகர்பேசிகள் காவலில் எடுக்கப்படும் போது, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகள் மற்றும் தரவுப் பாதுகாப்பு (Data Protection) தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதில்லை. இதன் விளைவாக, தமது மின்னணுச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்படும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களும் இணையத்தள ஆசிரியர்களும் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

## 5. நிகழ்நிலை வெளியீடுகள் / உள்ளடக்கங்களால் தனிநபர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்

### 5.1. போலி அறிக்கைகள் மூலம் தவறாக வழிநடத்துதல்

இணையத்தில், குறிப்பாக சமூக ஊடகங்களில் போலியான தகவல்கள் பரப்பப்படுவதன் மூலம் பல மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில், தனிநபர்களின் நற்பெயர் மற்றும் நற்பண்புகளுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலான இத்தகைய தகவல்கள் பரப்பப்படுவது, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மாத்திரமன்றி அவர்களது குடும்பத்தினருக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது. ஏனைய ஊடகங்களைப் போலன்றி, இணைய ஊடகங்களின் இயல்பான தன்மை காரணமாக போலியான தகவல்கள் மிக வேகமாகச் சமூகத்தில் பரவுகின்றன.

இதனால் மிகக் குறுகிய காலத்திற்குள் பாரிய சேதங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் இந்த நிலைமை மிகவும் பாதிப்புமிக்கதாக உள்ளது.

### 5.2. வெறுப்புப் பேச்சு (Hate Speech)

*மத மற்றும் இனக் குழுக்கள், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் மற்றும் LGBTQ சமூகத்தினரை இலக்கு வைத்த வெறுப்புப் பேச்சுகள் சமூக ஊடகங்களில் பதிவிடப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதன் விளைவாக, அந்தத் தனிநபர்கள் சமூகத்தில் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.*

### 5.3. தனிநபர்களின் அந்தரங்க விடயங்களை வெளியிடுவதன் மூலம் அசௌகரியங்களை ஏற்படுத்துதல்

*தனிநபர்களின் அந்தரங்கத்தைப் பாதிக்கும் வகையிலான புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் தரவுகள் போன்ற மிகவும் தனிப்பட்ட தகவல்கள் சமூக ஊடகங்களில் பதிவிடப்படுவதையும், அதன் மூலம் அவர்களின் தனியுரிமைக்கு (Privacy) பாரிய சவால்கள் ஏற்படுத்தப்படுவதையும் காணமுடிகிறது.*

### 5.4. மிரட்டிப் பணம் பறித்தல் (Extortion Demands)

*தனிநபர்களின் அந்தரங்கத் தகவல்களைச் சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக அச்சுறுத்தி, அவ்வாறு செய்யாமல் இருப்பதற்குப் பணம் கோருதல் அல்லது பிற கோரிக்கைகளை முன்வைத்தல் போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன.*

## 6. நிகழ்நிலை வெளியீடுகள் / உள்ளடக்கங்கள் தொடர்பான சட்டப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான பரிந்துரைகள்

*நிகழ்நிலை வெளியீடுகளை உருவாக்கும் தரப்பினர் மற்றும் அவற்றால் பாதிக்கப்படும் தரப்பினர் ஆகிய இரு தரப்பினருக்கும் ஏற்படும் சிக்கல்களைக் குறைப்பதற்கு, அதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் பொறுப்பு உள்ளது. இந்தச் சூழலில் அரசாங்கம், இணைய ஊடகப் பயனர்கள், ஊடக நிறுவனங்கள், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இணைய சேவை வழங்குநர்கள் ஆகியோரைப் பங்குதாரர்களாக (Stakeholders) அடையாளப்படுத்தலாம். அதற்கமைய, நிகழ்நிலை வெளியீடுகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகளைக் குறைக்க பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்:*

**6.1.** *நிலவும் சட்டப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்*

**6.1.1.** *நிகழ்நிலை காப்புச் சட்டத்தைத் திருத்துதல்: இச்சட்டத்தின் 12 முதல் 22 வரையான பிரிவுகளின் தற்போதைய பரந்த வீச்செல்லையைக் குறைத்து, அவற்றை மேலும் தெளிவானதாக மாற்றுதல்; அத்துடன் நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவை மிகவும் சுயாதீனமான நிறுவனமாக மாற்றி, அதன் பொறுப்புக்கூறலை (Accountability) மேம்படுத்தும் வகையிலான திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.*

**6.1.2.** *பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம்: இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் தற்போதைய பரந்த தன்மையானது இணையக் கருத்து வெளிப்பாடுகளில் தலையிடுவதால், அதில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுதல்.*

**6.1.3.** *சட்டவிரோதக் கைதுகளைத் தடுக்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தல்: இணையத்தில் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோதக் கைதுகள் பெரும்பாலும் ICCPR சட்டத்தின் 3(1) பிரிவு, தண்டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவு மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. எனவே, அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் உச்ச நீதிமன்றம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.*

**6.1.4.** *அவதூறு/இழிவுபடுத்தல் என்பது குற்றவியல் குற்றமல்ல என்பதை பொலிஸார் ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்: * அவதூறு என்பது ஒரு குற்றவியல் குற்றமல்ல என்பதை பொலிஸார் அங்கீகரிக்க வேண்டும்.*

- ***தமக்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாகக் கூறி, சமூக ஊடகப் பதிவுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி தனிநபர்கள் முன்வைக்கும் முறைப்பாடுகளை, அவை சிவில் தன்மை கொண்டவை என விளக்கி பொலிஸார் கையாள வேண்டும்.***

**6.1.5.** *சமூக ஊடகத் தளங்களுக்கான சட்டக் கட்டமைப்பு: பிரஜைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கூற்றுகள் சமூக ஊடகங்களில் வெளியாவதைத் தடுப்பதற்கும், அத்தகைய பதிவுகளை உடனடியாக அகற்றுவதை உறுதி செய்வதற்கும் சமூக ஊடகத் தளங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான ஒரு சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல்.*

**6.1.6. *உண்மைத் தன்மை சரிபார்ப்பு* (Fact-checking) *குழுக்களுக்கு ஊக்கமளித்தல்:***
*நிகழ்நிலைத் தகவல்களின் உண்மைத் தன்மையைச் சரிபார்க்கும் மற்றும் உறுதிப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் குழுக்களுக்குத் தேவையான அங்கீகாரத்தையும் ஊக்கத்தையும் அரசாங்கம் வழங்க வேண்டும்.*

**6.1.7. *இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின்* (CERT) *அதிகார வரம்பை விரிவுபடுத்துதல்*:**
*நிகழ்நிலை வெளியீடுகள் மற்றும் உள்ளடக்கங்கள் மூலம் அநீதிக்கு இழைக்கப்படுபவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும், அதில் தலையிடுவதற்கும் ஏதுவாக* 'Sri Lanka CERT' *நிறுவனத்தைப் பலப்படுத்தி, அதன் ஆணைப்பத்திரத்தை* (Mandate) *விரிவுபடுத்தல் வேண்டும்.*

## 6.2. *ஊடகவியலாளர்கள் மற்றும் பிற இணையப் பயனர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்*

**6.2.1. *ஒழுக்கநெறிக் கோவையை* (Code of Ethics) *உருவாக்குதல்:*** *நிகழ்நிலை வெளியீடுகளை மேற்கொள்பவர்கள் தமக்கென ஒரு சுய-ஒழுங்குமுறை ஒழுக்கநெறிக் கோவையை உருவாக்கி அதைப் பின்பற்றுதல்.*

**6.2.2. *துல்லியத்தன்மை* (Accuracy) *குறித்து அவதானமாக இருத்தல்*:** *தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதில் அதீத கவனம் செலுத்துதல்.*

**6.2.3. *வெறுப்புப் பேச்சைத்* (Hate Speech) *தவிர்த்தல்*:** *இனம், மதம் அல்லது பாலின அடிப்படையில் வெறுப்பைத் தூண்டும் உள்ளடக்கங்களைத் தவிர்த்தல்.*

**6.2.4. *டிஜிட்டல் எழுத்தறிவை* (Digital Literacy) *மேம்படுத்துதல்:*** *இணைய ஊடகங்களைப் பாதுகாப்பாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவதற்கான அறிவை வளர்த்துக் கொள்ளுதல்.*

**6.2.5. *விமர்சன ரீதியான சிந்தனையை* (Critical Thinking) *வளர்த்தல்:*** இணையத்தில் பகிரப்படும் தகவல்களை அப்படியே நம்பாமல், அவற்றை பகுப்பாய்வு செய்து அதன் நம்பகத்தன்மையை ஆராய்தல்.

**6.2.6. *சட்ட அறிவை மேம்படுத்தல்:*** நிகழ்நிலை வெளியீடுகள் தொடர்பில் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் தமக்கான உரிமைகள் குறித்து விழிப்புடன் இருத்தல்.

**6.2.7. *வலைப்பின்னல்களை* (Networking) *உருவாக்குதல்*:** சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இணைய எழுத்தாளர்கள் தமக்கிடையே ஒரு வலுவான தொடர்பாடல் வலையமைப்பை உருவாக்கி, சட்டச் சிக்கல்களின் போது ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குதல்.

**6.2.8. *முறையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்*:** தமக்கு பாதிப்பு ஏற்படும் போது, அச்சமின்றி உரிய சட்ட வழிகளைப் (நீதிமன்றங்கள் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழு) பயன்படுத்தி நிவாரணம் தேடுதல்.

### 6.3. *சமூக ஊடகத் தளங்கள்* (Social Media Platforms) *மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்*

**6.3.1. *சமூகத் தரநிலைகளை* (Community Standards) *மீளாய்வு செய்தல்*:** இலங்கையின் கலாசார மற்றும் சமூகச் சூழலுக்கு ஏற்பத் தமது சமூகத் தரநிலைகளை அவ்வப்போது மீளாய்வு செய்து இம்மேம்படுத்துதல்.

**6.3.2. *முறைப்பாடுகளுக்கு விரைவாகப் பதிலளித்தல்*:** சமூகத் தரநிலைகளை மீறும் பதிவுகள் குறித்துப் பயனர்கள் மேற்கொள்ளும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்தல்.

**6.3.3. *அரசாங்கத்துடன் இணைந்து சட்டப் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்*:** பிரஜைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, சட்டக் கட்டமைப்பிற்கு இணங்க அரசாங்கத்துடன் இணைந்து பொறுப்புக்கூற வேண்டிய பொறிமுறைகளை உருவாக்குதல்.